Registered as a News Paper   பக்கங்கள் 04   விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM   Peoples Daily   மக்கள் தினசரி

நாதம் 03   திருவள்ளுவர் ஆண்டு 2023   ஆவணி 08   (24 - 08 - 1992)   திங்கட்கிழமை   ஓசை 188


## பௌதிக வினாத்தாள்கள் முன்னரே வெளியாகின?

கண்டி மாவட்டத்தில் க. பொ. த. (உ/த) பரீட்சையின் பௌதிக பாடத்திற்கான வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்னரே வெளியாகிவிட்டதாக பரீட்சைத் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பரீட்சை நடைபெறுவதற்கு முன்பாகவே இம்மாதத்தின் ஆரம்ப நாட்களில் பௌதிகப் பாடத்திற்கான வினாக்களின் சில பகுதிகளை மாணவர்கள் பெறக்கூடியதாக இருந்துள்ளது. பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் இது சம்பந்தமான முறைப்பாடுகள் பற்றி விசாரிப்பதாக நம்பகரமாகத் தெரியவருகிறது. கண்டியிலுள்ள ரீயூட்டறிஒன்றில் இந்த வினாக்கள் மாணவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டதுடன் விடைகளும்அந்த ரீயூட்டறி ஆசிரியரினால் போதிக்கப்பட்டுள்ளது

# கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடு தீவிரம்

# 284 தமிழர்கள் பொலிஸாரால் கைது

## புலிகள் தாக்குதல் நடத்தலாமென பாதுகாப்பு வட்டாரங்கள் அச்சம்

[கொழும்பு]

கொழும்பிலும் அதைச் சூழவுள்ள இடங்களிலும் மூன்று தினங்களில் 284 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கொழும்பில் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதே வேளை, கொழும்பிலும் அதை சூழவுள்ள பகுதிகளிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தெற்கில் கடந்த வாரத்தில் மூன்று தினங்களில் மட்டும் 284 தமிழர் சிறிலங்காப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுவிசாரணைசெய்யப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களில் 200 பேர் கொழும்பின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், 84 பேர் நீர்கொழும்புப் பகுதியிலிருந்தும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு கிழக்கு, மலையகப் பகுதிகளிலிருந்து பல்வேறு அலுவல்கள் காரணமாக அங்கு சென்று தங்கியிருந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

புலிகள் தெற்கில் ஊடுருவியிருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரிலேயே இவர்கள்கைது செய்யப்பட்டதாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கொழும்பிலும் தெற்கின் நகர்ப்புறங்களிலும் புலிகளின் தாக்குதல்களை எதிர்கொள்ளப் படையினர் தயார் நிலையில் உள்ளனர் எனவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பில் திடீர் வாகனச் சோதனைகளும், பிரதானவீதிகளில் சோதனை நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

## மகஸீன், களுத்துறை சிறைகளில் 600 தமிழர்கள் தடுத்துவைப்பு

(கொழும்பு)

சுமார் 600 தமிழர்கள் காரணம் கூறப்படாமல் கைதாகி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படாமல் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்

தடுப்புக் காவல் உத்தரவு அல்லது அவசர காவல் விதிகளின் கீழ் கொழும்பு மகஸீனிலும், களுத்துறை சிறைச்சாலையிலும் சுமார் 600 தமிழர்கள் இருக்கிறார்கள் இவர்களில் 400 பேரைப் பேட்டி கண்டு விடுவிக்கக் கோரி 100க்கு அதிகமான ஆட்கொணர்வு மனுக்களை வழக்கறிஞர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறார்

## இந்தியாவிலிருந்து திரும்பிய நான்கு இளைஞர்கள் மறைவு

தாண்டிக்குளம் அகதி முகாமிலிருந்து கடந்த வெள்ளியன்று சினிமா பார்ப்பதற்காக வவுனியா நகருக்குப் புறப்பட்டுச் சென்ற ஐந்து ...

...ந்து அண்மையில் இலங்கை திரும்பியவர்களாவர் காலை 9-00 மணியளவில் சினிமா பார்க்கப் போவதாக அறிவித்து விட்டுச் சென்ற இவர்...

அராலித்துறை கண்ணிவெடி

## சம்பவம் நடந்த இடத்தை

### இசைமாலை

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 25 ஆம் திகதி மாலை 8.30 மணிக்கு இடம்பெற இருந்த செஞ்சோலை இசைமாலை நிகழ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ஊரடங்கு நீக்கம்

யாழ். மாவட்டத்தில் அமுல் செய்யப்பட்டிருந்த ஊரடங்கு நேற்று பகல் 10.00 மணி முதல் நீக்கப்பட்டதாக சிறிலங்கா கூட்டுப்படை தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

கிழக்கிலும், வவுனியாவிலும்

## 22 ஆயிரம் தமிழ்க்குடும்பங்கள் அவசர உதவிநாடிநிற்கின்றன

அரசசார்பற்ற நிறுவனங்கள் அறிக்கை

(நமது நிருபர்)

மட்டக்களப்பு, திருக்கோணமலை, அம்பாறை, வவுனியா, பொலநறுவை மாவட்டங்களில் கடந்தகாலங்களில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் 22482 குடும்பங்களைச் சேர்ந்த 85000 பேர் அவசரமான உதவிகளை நாடி நிற்பதாக அரச சார்பற்ற நிறுவனம் அறிவித்துள்ளது

அண்மையில் இந் நிறுவனம் மேற்படி மாவட்டங்களில் மேற்கொண்ட மதிப்பீடு ஒன்றிலிருந்து இது தெரிய வந்துள்ளது

இம்மதிப்பீட்டின் முழு விபரங்களும் வருமாறு:

மட்டக்களப்பு மாவட்டத்தில் 17614 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன. 24825 வீடுகள் சிறிதளவு சேதமடைந்துள்ளன. 80000 பேருக்கு மலசலகூட வசதிகள், குடிநீர்வசதிகளுக்கான கிணறுகள், குழந்தைகளுக்கான பால்மா, உடுதுணிகள் போன்றவை மிகவும் அத்தியாவசிய தேவையாக இருந்து வருகின்றன.

இங்குள்ள 28 அகதிமுகாம்களில் 2437 குடும்பங்களும் உறவினர் வீடுகளில் 15860 குடும்பங்களும் உள்ளனர், தொழிலாளர்களுக்குதொழில் வசதிகள் இல்லை, அரச ஊழி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. அகதி முகாம்களில் 412 விதவைத் தாய்மார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல்வேறு அகதி முகாம்களில் 412 விதவைத் தாய்மார் தங்கி வாழ்ந்து வருகின்றனர்

வாழைச்சேனை, கள்ளியங்காடு, செங்கலடி, கல்லடி, ஏறாவூர், குறுமன்வெளி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வினாலேயே பிரச்சினைக்குமுடிவுகாணலாம்

### - குஜ்ரால்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் எவ்வாறு நடந்துகொள்வது என்பதை தீர்மானிப்பது சிறிலங்காவின் உள்நாட்டு விவ...

...றைக் காண்பதே பிரச்சினைக்கு தீர்வாகமுடியும்

பல உயிர்களை சிறிலங்காவில் நடைபெறும் யுத்தம் பலிவாங்கியுள்ளது இந்தியா...

...க்க போராளிகளுடன் அரசியல் தீர்வுக்கு வருவதற்கான...

யன்று சினிமா பார்ப்பதற்காக வவுனியா நகருக்குப் புறப்பட்டுச் சென்ற ஐந்து பேர் இதுவரை அகதி முகாம் திரும்பவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.
மேற்படி ஐந்து பேரும் தமிழகத்தில் அகதிகளாக இரு

9-00 மணியளவில் சினிமா பார்க்கப் போவதாக அறிவித்து விட்டுச் சென்ற இவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது குறித்து இதுவரை எது வித தகவலையும் அறிய முடியவில்லை என்றும் தெரிவிக்கப்

(4ஆம் பக்கம் பார்க்க)

# சம்பவம் நடந்த இடத்தை விசாரணைக் குழு பார்த்தது

அராலித்துறை அமுக்க வெடிச்சம்பவம் பற்றி விசாரிக்கவென நியமிக்கப்பட்ட முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபரசர் ஐ எம். இஸ்மாயில் தனிநபர் குழு சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு கடந்த வெள்ளியன்று நேரடியாக சென்று பார்வையிட்டு கொழும்பு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
குழுவின் செயலாளரான பாதுகாப்பு அமைச்சின் உதவிச் செயலாளர் சுஜமானும்

(4ஆம் பக்கம் பார்க்க)

என்பதை தீர்மானிப்பது சிறிலங்காவின் உள்நாட்டு விவகாரம் இந்தியாவின் புலிகள் மீதான தடை இதனை எந்த விதத்திலும் பாதிக்காது என இந்தியாவின் முன்னாள் வெளி விவகார அமைச்சர் ஐ. கே குஜ்ரால் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில் இராணுவ நடவடிக்கைகள் என்ன முடிவை எட்டும் என்பதையிட்டு என்னால் எது வும் தெரிவிக்க முடியாது ஆனால் அரசியல் தீர்வொன்

வில் நடைபெறும் ... பலிவாங்கியுள்ளது இந்தியாவைப் பொறுத்தவரை ராஜீவ் உயிரும் பறிக்கப்பட்டுள்ளது இந்த உயிரிழப்புகளை தவிர்

யல் தீர்வுக்கு வருவதற்கான சூழலை சிறிலங்கா ஜனாதிபதி தோற்றுவிக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்

# செஞ்சிலுவை அதிகாரிகள் பலாலி முகாம் விரைவு

## பிடிக்கப்பட்ட பொதுமக்களை பார்வையிடுவதற்கு முயற்சி

(யாழ்ப்பாணம்)
சர்வதேச செஞ்சிலுவை சங்க பிரதிநிதி பிரான்குடா சான்கு தலைமையிலான குழு ஒன்று இன்று பலாலி முகாமிற்கு செல்லவுள்ளது.
இவர்கள் அங்குள்ள இராணுவ அதிகாரிகளைச்சந்தித்து கடந்த 20, 21-ம் திகதிகளில் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்ட பொதுமக்களின் நிலை குறித்து அறிந்து கொள்வதுடன் அவர்களை பார்வையிடவும் முயற்சிப்பர் என தெரியவருகிறது.
இராணுவ நடவடிக்கையின் போது பிடிக்கப்பட்ட 400க்கு மேற்பட்ட பொதுமக்கள் அளவெட்டி அளகோலை பிள்ளையார் கோவிலிலும், இளவாலை கிறிஸ்தவ கன்னியாஸ்திரி மடத்திலும், மாதகல் அந்தோனியார் ஆலயத்திலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என தெரியவருகிறது.
இவர்களில் கன்னியாஸ்திரிகள், மாணவர்கள், இளைஞர்கள் வயோதிபர்கள் அடங்குவர் என தெரியவருகிறது.

# பெறுமதியான பொருள்கள் ராணுவத்தால் கொள்ளை

(நமது நிருபர்)
அளவெட்டி, மாதகல், இளவாலை பகுதிகளில் தரித்துநிற்கும் சிறிலங்கா இராணுவத்தினர் பொதுமக்களின் சொத்துக்களைச் சூறையாடுவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளதாக நேற்று இராணுவத்தால் விடுதலை செய்யப்பட்ட வயோதிபர் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார். அவ்வயோதிபர் மேலும் தெரிவிக்கையில் கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் வலி வடக்குப் பகுதியில்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# காணாமல்போனோர்விபரம் செஞ்சிலுவை திரட்டுகிறது

(யாழ்ப்பாணம்)
வலிகாமம் வடக்கு மற்றும் மேற்குப்பகுதிகளில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளின் போது காணாமல போனோர் பற்றிய முழு விபரங்களையும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் கிளைகளில் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
அண்மைக்கால இராணுவ நடவடிக்கையின்போது உறவினர்களைப் பிரிந்து தகவல்களைப் பெறமுடியாத நிலையில் உள்ளோர் தத்தமது உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இலங்கை செஞ்சிலுவைச்சங்க கிளைகளில்பதிவுசெய்துகொள்ளலாம்.

டென்சிலும், அதிகாரிகளும்

# பயணம் செய்த வாகனம் கொழும்பு சென்றது

(கொழும்பு)
லெப் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட 10பேர் கொல்லப்பட்ட சம்பவத்தில் சிதைந்த லாண்ட்ரோவர் வாகனத்தினது பகுதிகள்விமானம் மூலம் கொழும்பிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.
இம்மாதம் 28 ஆம் திகதியே இச்சம்பவங்கள் பற்றிய விசாரணைகள் இஸ்மாயில் குழுவினால் ஆரம்பிக்கப்படும்.
இதேசமயம் கடந்த வாரம் அராலியில் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குநேரடியாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வீடுகள், மதில்கள் இராணுவத்தால் உடைப்பு

(நமது நிருபர்)
அளவெட்டி வடக்கில்தரித்து நிற்கும் இராணுவத்தினர் அங்கு தமது நிலைகளைப் பலப்படுத்தும்முயற்சியில்தீவிரமாக ஈடுபட்டுவருவதாக இராணுவத்தால் விடுதலைசெய்யப்பட்ட வயோதிபர் ஒருவர் தெரிவித்தார்.
அங்கு இராணுவத்தினர் பொதுமக்களின் வீடுகளையும் மதில்களையும் உடைத்தும், கூரை சீற்றுக்களைக் கழற்றியும் தமது அரண்களை அமைத்துவருவதாகவும், பனைமரங்களைத் தறித்து அவற்றைத் துண்டாடி அதன் மூலமும் தமது பாதுகாப்பு அரண்களை பலப்படுத்திவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# ராணுவப் பிடியினுள் உணவுப் பொருள்கள்

(நமது நிருபர்)
மாதகல் பகுதியில் பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பத்து லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் இராணுவத்தின் பிடிக்குள் சிக்கியுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
கடந்த வெள்ளிக்கிழமை மாதகல் பகுதியை சிறிலங்கா இராணுவம் முற்றுகையிட்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

# முல்லை. மீனவர் மீது கடற்படையினர் தாக்குதல்

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு கடற்பரப்பில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.
கடந்த வியாழனன்று இடம்பெற்ற இச்சம்பவத்தால் மீனவர்கள் படகிலிருந்து குதித்து நீந்திக் கரைசேர்ந்தனர்.
இப்பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட சிறிலங்கா அரசாங்கம் இரண்டு வாரங்களுக்கு தடைவிதித்திருந்தது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லையில் எறிகணை வீச்சு

(முல்லைத்தீவு)
அலம்பில் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் தண்ணீரூற்று பகுதியை நோக்கி எறிகணை

(4 ஆம் பக்கம் பார்க்க)

வட பகுதியிலுள்ள தமிழ்க் குழுக்களை

# கிழக்கிற்கு மாற்றுமாறு படை அதிகாரிகள்வற்புறுத்து

(கொழும்பு)
வடபகுதியில் சிறிலங்கா இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டுவரும் குழுக்கள் விரைவில் வடபகுதியில் இருந்து கிழக்கு மாகாணத்திற்கு மாற்றப்படவுள்ளார்கள் என இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படை அதிகாரி காரைநகரில் சுட்டுக்கொலை

(கொழும்பு)
காரைநகர் கசூரினா கடற்கரையில் வைத்துக்கடற்படை அதிகாரி ஒருவர் அவரின்கீழ் கடமையாற்றும் ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
காரைநகர் கடற்படைமுகாமைச் சேர்ந்த கார்ட கமாண்டர் எம். சிறிபால என்பவர் ஏ. ஆர். அல்விஸ் என்ற கடற்படை வீரருக்கு கடமையில் தவறு இழைத்தமைக்காக தண்டனை வழங்கியுள்ளார்.
அதனால் பொறுக்கமுடியாமல் ஆத்திரமடைந்த அல்விஸ் தனது துப்பாக்கியால் சிறிபாலாவைச் சுட்டுக் கொன்றதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சூழலில் உனக்கென்ன வெறுப்பு -அதைக் காப்பது என்றுமுன் பொறுப்பு**

## வரி விளம்பரம்

### தேவை

45 கலன் றம் மிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட வட்டத் தகட்டு மூடி தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி/4924)

### புத்தகக்கண்காட்சியில்

ஐந்து மீரா பிரசுரங்களை வாங்குபவர்களுக்கு 50 ரூபா பெறுமதியான ''மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்'' என்னும் புதிய நாவல் அன்பளிப்பாக வழங்கப்படுகிறது ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர் கோயில் முன்புறம் நல்லூர். (சி/4908)

### ஒரேயொரு நூல்

அராலியூர் சுந்தரம்பிள்ளை எழுதிய முதலாம்பிள்ளை 30 இன்று விற்பனையாகும் ஒரேயொரு வானொலி நாடகநூல். இலக்கியப் பரிசு பெற்றது. 20 வீத கழிவு உண்டு 30, கடையிற்சுவாமி வீதி, நீராவியடி. யாழ்ப்பாணம். (3068)

### 'நிழல்கள்' சிறுகதைத் தொகுப்பு

''அக்கினியில் கருகும் ஆத்மாக்கள்'' மூலம் முதற் பரிசான தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்ட செல்வி சந்திரா தியாகராசா (திருமதி சந்திரா இரவீந்திரன்) வின் பரிசுபெற்ற சிறுகதைகள், குறுநாவல் அடங்கிய ''நிழல்கள்'' பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம், உதயன் புத்தகசாலை பருத்தித்துறை ஆகிய இடங்களில் விற்பனையாகின்றது. (3071)

### எழுதுவினைஞர்களுக்கான பயிற்சி

வடமராட்சியில் உயர்கல்வி நிறுவனமும், மோடேன் கொமேஸ் நிறுவனமும் இணைந்து நடாத்தும் எழுதுவினைஞர் அனுமதிப் பரீட்சைக்கான துரித பயிற்சி, திறமை மிக்க ஆசிரியர்களால் 26-8-92இல் ஆரம்பமாகிறது. இன்றே பதிவு செய்யுங்கள். மோடேன் கொமேஸ், சிவன்கோவிலடி, பருத்தித்துறை. (3072)

# உண்மையான விருப்பம் இருந்தால் 24 மணி நேரத்திற்குள் தீர்வு காணலாம்

## -இனப் பிரச்சினை குறித்து செல்லச்சாமி

(மாத்தளை)

''வடக்குக் கிழக்கிலே நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண அரசியல் கட்சிகள் அந்தரங்க சுத்தியோடும், மனிதாபிமான நல்லெண்ணத்தோடும் அக்கறை எடுத்துக்கொண்டால் இந்த இனப்பிரச்சினைக்கு இருபத்திநான்கு மணி நேரத்தில் தீர்வு கண்டுவிடமுடியும்''

இவ்வாறு இ. தொ. கா. பொதுச் செயலாளரும், கைத்தொழில் ராஜாங்க அமைச்சருமான எம். எஸ். செல்லச்சாமி மாத்தளையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும் போது குறிப்பிட்டார்.

வட-கிழக்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த யுத்தம் துரகிர்ஷ்ட வசமானது அந்நிய நாட்டுடன் நடைபெறும் யுத்தம் அல்ல இது. உள்நாட்டுச் சகோதரர்கள் ஒருவரை யொருவர் சுட்டுக் கொல்லும் யுத்தம். கோடிக் கணக்கான பணம் செலவிடப்படுகிறது நாளாந்தம் சாவுப் படுகுழி நிரம்பி வழிகிறது.

இரண்டாவது உலக மகா யுத்தம் கூட நாலைந்து ஆண்டுகளில் முடிவுக்கு வந்ததை அறிவோம் உள்நாட்டிலே பத்து ஆண்டுகளுக்கு மேலாக யுத்தம் தொடர்கிறது இந்த யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வர இந்நாட்டுப் பெரிய அரசியல் கட்சிகளிடையே அந்தரங்க சுத்தி ஏற்பட வேண்டும். அந்த உணர்வு மனிதாபிமானத்தை அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டும்

காரிருள் சூழ்ந்த கடந்த கால இனவாத சூழ்நிலைகளால் ஏற்பட்ட அரசியல் குரோதம் நாளாந்தம் பல்கிப் பெருகி இப்போது பூதாகரமாக உருவெடுத்துள்ளது. காலத்துக் காலம் இனப்பிரச்சினைக்கு அரசியல் சாயம் பூசப்பட்டு அரசியல் லாபத்தைத் தேடிக்கொள்ளும் சம்பிரதாய கொள்கை மாற வேண்டும்.

இந்திய வம்சாவளி மக்களுடைய பிரஜாவுரிமை பிரச்சினையைத் தூக்கிக் கொண்டு அரசியல் லாபம் தேடினார்கள் அதன் பிறகு மொழிப் பிரச்சினையை ஆகாயமாக நினைத்து ஆயுதமாகப்பாவித்தார்கள் இவ்வாறான அரசியல் லாபத்தைத் தேடிக் கொள்ளும் முனைப்பால் ஏற்பட்ட வடுக்கள் இன்னமும் மறையவில்லை அமைதியில்லாத நாடு ஒருபோதும் அபிவிருத்தி அடைய முடியாதென்றும் செல்லச்சாமி தமதுரையில் குறிப்பிட்டார்.

### மாவீரர்களுக்கு மக்கள் அஞ்சலி

(தென்மராட்சி)

சிறிலங்கா இராணுவத்தினருடனான தாக்குதல்களின் போது வீரச்சாவடைந்த கப்டன் தும்பன் வீரவேங்கைகள் இன்பன், மூப்பனார் மாறன், பாருதி, அனீபா கண்ணன், கமலன் ஆகிய எட்டு மாவீரர்களையும் நினைவு கூருமுகமாக கடந்த புதன்கிழமை இரவு 8. 30 மணிக்கு சாவகச்சேரி பெரிய மாவடி சித்திவினாயகர் கலைமன்ற அரங்கில் நினைவஞ்சலிக் கூட்டம் இடம்பெற்றது ஆரம்ப நிகழ்வாக மாவீரரின் பெற்றோர் நினைவுச்சுடர்களை ஏற்றி வைத்தனர் தொடர்ந்து சாவகச்சேரி வட்ட அவைப் பொறுப்பாளர் திரு. கோபால் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ் மாவட்ட உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. தங்கன், மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி தமிழ் மங்கை. ஆசிரியர் மார்க்கண்டு ஆகியோர் உரையாற்றினர்.

இதனைத் தொடர்ந்து யாழ் மாவட்ட கலைபண்பாட்டுக்கழக ஆதரவில் திருமலை இடம்பெயர்ந்தோரால் ''காணி நிலம் வேண்டும்'' நாடகம் இடம் பெற்றது அன்றைய தினம் மேற்படி எட்டு மாவீரர்களின் குடும்பத்தினரும் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது (35)

# தமிழர்கள் வெல்லப்போகிறார்கள்; பிக்கு அரசு மீது பாய்ச்சல்

(மாத்தறை)

வடக்கு-கிழக்கிலும் மலையகத்திலும் தமிழர்கள் வெற்றிவாகை சூடும் நாள் நெருங்கி வருகின்றது எனவே பெரும்பான்மைச் சமூகம் ஒன்று சேரவேண்டும். அவர்களை ஒன்றிணைக்கும் பொறுப்பு இப்போது பௌத்தபிக்குகளின் சிரம் மேல் விழுந்துள்ளது இவ்வாறு ஹபரதுலை பௌத்த பிக்குகள் சம்மேளன கூட்டத்தில் உரையாற்றிய தென்னிலங்கையின் பிரதான மஹாநாயக்கதேரர் பண்டித பள்ளத்தாரே சுமணயோதி கூறினார் அவர் தொடர்ந்து கூறுகையில் நாய்களைக் கொன்றேனும் காசு உழைத்தால் போதும் என்ற நிலையில் சிலர் இருக்கின்றனர் நீண்ட காலதிட்டத்திற்கு அமையாது குறுகியதிட்டங்களின் கீழ் பிரதிபலன்களை பெற அரசுவிரும்புகின்றது. இதன் அடிப்படையில் எத்தனையோ நடைபெறுகின்றன உடுதுணித்தொழிற்சாலைகள் நிறுவப்படுகின்றன. இதனால் கலாசாரம் அழிந்து ஒழுக்கம் மறைந்து விடுகின்றது உலகில் விபச்சாரத்தொழிலில் இலங்கை மூன்றாவது இடம் வகிக்கின்றது.

பதவிக்கு வரும் அரசாங்கத் தலைவர்கள் எல்லாம் தங்களுக்குத்தான் உலகில் எல்லாம் தெரியும் என்று நினைக்கின்றனர் இதனால் தான் அவர்கள் பிறர் கூறுவதை ஏற்றுக்கொள்வதில்லை இன்று நாட்டின் பெரும்பான்மைச் சமூகம் பிளவுபட்டுள்ளது இதற்கு அரசியல் வாதிகளே காரணம் அந்தப் பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில்

### பதில் உதவி அ.அதிபர்களாக செயலக அதிகாரி நியமனம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில் ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்களின் நிவாரண நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கென யாழ் செயலக அலுவலக உத்தியோகத்தர்கள் மூன்று பேரை யாழ். அரச அதிபர் நியமித்துள்ளார்.

இவர்கள் மேற்படி பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்களின் நிவாரண நடவடிக்கைகளைக் கவனிப்பார்கள்.

இப்பகுதிகளுக்கு ஏற்கனவே இருந்த உதவி அரசஅதிபர்கள் கொழும்பிற்குச் சென்றுள்ளனர். எனவே இவர்கள் இங்கு திரும்பும் வரை மேற்படி நியமிக்கப்பட்டுள்ளோர் சேவையில் ஈடுபடுவார்கள் என யாழ் செயலகம் அறிவித்துள்ளது. (பா)

### மலையகத்தில் 33 செயலகங்கள்

(கொழும்பு)

மத்திய மாகாணத்தில் அடங்கும் மலையகத்தில் இவ்வருட இறுதிக்குள் 33 பிரதேச செயலகங்கள் திறக்கப்படவுள்ளதாக பொது நிர்வாக மாகாணசபைகள் தெரிவித்துள்ளது.

கண்டி மாவட்டத்தில் 17 செயலகங்களும் நுவரெலியாவில் ஐந்தும் மாத்தளையில் பதினொன்றுமாக மொத்தம் 33 செயலகங்கள் திறக்கப்படவுள்ளன.

வடக்குக்கிழக்கு மாகாணங்...

### வெள்ளி தவிர்த்து திறந்திருக்கும்

(குருநகர்)

யாழ் மாவட்டத்தில் மீண்டும் இறைச்சிக்கடைகள் வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் திறந்திருக்குமென அறிவிக்கப்படுகிறது

குடாக்கடல் பகுதிகளில்

### இசை விழா

18 தொழிற்சங்கங்களில்...

## நன்றி நவிலலும் 31-ம் நாள் நினைவஞ்சலி அழைப்பும்

அன்னையின் மடியில்
07 | 06 | 1912



ஆண்டவன் பாதத்தில்
25 | 07 | 1992

### ஸ்ரீமதி பொன்னம்மா பரமநாதன்

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
நாட்கள் முப்பது போனாலும்
உங்களை என்றும் எங்களால் மறக்க
முடியவில்லை உங்கள் பொன்னான
நினைவுகள் எம்மை விட்டு என்றும்
அகலா

அன்னாரின் மரணச் செய்தி அறிந்து வீட்டிற்கு வருகை தந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் 25-07-1992 இல் வேம்பன் மயானத்தில் நடைபெற்ற தகனக்கிரியையில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியவர்கள், 23-08-1992 அன்று நடைபெற்ற அந்தியேட்டிக் கிரியையில் கலந்து சிறப்பித்தவர்கள் மற்றும் எமக்கு பல வழிகளிலும், உதவிய உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இன்று (24-08-1992) திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு அவர் வசித்த உரும்பராய் இல்லத்தில் நிகழ இருக்கும் சபிண்டீகரண நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

''பரமபதி''
36/6 பலாலி வீதி,
உரும்பராய் தெற்கு. (3067)

சகோதரர்கள்,
மக்கள், மருமக்கள்.

## நினைவு கூருகின்றோம்...
## 1992 - 08 - 24

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னாரில், சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச்சங்க அலுவலகரான தமிழ்ப் பொது மகன்.

அறிவிக்கப்படுகிறது

குடாக்கடல் பகுதிகளில் கடல் தொழில் நிறுத்தப்பட்டிருப்பதால் ஏற்பட்டிருக்கும் கறி உணவுத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கத்துடன் இந் நடவடிக்கை தற்காலிகமாக நடைமுறைப்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது (21)

## சனசமூக நிலைய திறப்புவிழா

(கரவெட்டி)

வீரபத்திரர் சனசமூக நிலையத்தின் திறப்புவிழா எதிர்வரும் புதன்கிழமை மாலை 4 30 மணியளவில் சரணவாய் வடக்கு வீரபத்திரர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது. முறைசாராக் கல்விப்பிரிவைச் சேர்ந்த எஸ். சிறிஸ்கந்தராசா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து சிறப்பிக்க உள்ளனர். பல கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## இசை விழா

ஆனைப்பந்தி யாழோசை மன்றம் வழங்கும் இசைவிழா இன்று ஆரம்பமாகவுள்ளது. இந்த இசைவிழா 28ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் 6.35 மணி முதல் 9.35 மணி வரை இவ் இசைவிழா நல்லை ஆதீனத்தில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

7.00 மணி முதல் 8 00 மணி வரை நல்லூர் ரவி, ரஜி சகோதரர்களின் நாதஸ்வர இசையும், 8.00 - 9 35 வரைகீழைத்தேய இசையும் இடம்பெறும் வதனசோதி ஆறுமுகம் அவர்களின் பாட்டு இடம்பெறும் கண்ணாப்பாள் பாக்கியராசா வயலினும், வர்ணராமேஸ்வரன் மிருதங்கமும் வாசிப்பார்கள்.

## இடம்மாற்றம்

(கொழும்புத்துறை)

சிறுப்பிட்டியில் இயங்கி வந்த கால்நடை மிருக வைத்தியசாலை தற்போது நீர்வேலிக்கு இடமாற்றப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

## 18 தொழிற்சங்கங்களின் அடையாள வேலை நிறுத்தம்

(கண்டி)

பதினெட்டு கூட்டுத்தொழிற்சங்கங்களின் கூட்டுக்கமிட்டி எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை ஒருநாள் அடையாளா வேலை நிறுத்தம் ஒன்றை மலையகத்தில் நடத்த இருக்கிறது.

தோட்டங்களின் நிர்வாகம் தனியார் மயமாக்கப்பட்ட பின்னர் தோட்டத் தொழிலாளர் அனுபவிக்கும் கஷ்டங்களை உணர்த்தவும் உரிமைகளை நிலை நிறுத்தவுமே இந்த அடையாள வேலை நிறுத்தம் நடைபெற இருப்பதாக அ இ. ஐக்கிய தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் எஸ். முருகையா நாவலப்பிட்டி நகர மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் புதிய கம்பனி நிர்வாகம் வந்த பின் தொழிலாளி ஒருவர் ஒரு நாளைக்கு 150மரத்திற்குப்பதில் 250 மரங்கள் சவ்வார்த்து வெட்டும்படி கேட்கப்பட்டுள்ளனர், உரம்போடும் தொழிலாளர்கள் எட்டுமணித்தியாலம் மலையில் நிற்க வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது. ஞாயிறுதினப் கொழுந்து பறிக்கும் தொழிலாளர்கள் ஒன்றரை நாள் பெயர் பெற கூடுதல் கொழுந்து பறிக்க வேண்டும் எனவும் நிர்ப்பந்திக்கப்படுகிறது.

இந்நாட்டில் பெரிய தொழிற்சங்கங்களை விட எஞ்சிய 18 தொழிற்சங்கங்களில் பல்லாயிரம் தொழிலாளர் அங்கம் வகிக்கின்றனர் தோட்ட உத்தியோகத்தர்களும் பல கஷ்டங்களுக்குள்ளாகி தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையில் சிக்கி கஷ்டப்படுகின்றனர் அவர்களின் உரிமைகள் நிலை நிறுத்தப்பட வேண்டும் என்பதை அரசிற்கு உணர்த்தவே இந்த அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்ள கூட்டுக்கமிட்டி தீர்மானித்துள்ளது.

## சீமெந்தின் விலைக்கு சமமாக உப்பின் விலை

(மன்னார்)

மன்னாரில் உப்பளம் மூடப்பட்டிருப்பதால் உப்பிற்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதோடு விலையும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் ஐம்பது ரூபா விற்று விற்பனைசெய்யப்பட்டு வந்த ஒரு மூடை உப்பு தற்போது 220 ரூபாவாக விற்பனை செய்யப்படுவதாகவும்

கற்பிட்டியில் இருந்தே உப்பை தனியார் வியாபாரிகள் எடுத்து வருகின்றனர் என்றும் ஒருமூடை உப்பின் விலை சீமெந்தின் விலைக்குச் சமமாக இருக்கிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது

வடக்குக்கிழக்கு மாகாணங்களில் மொத்தம் 67 செயலகங்கள் திறக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது தெரிந்ததே.

இதில் இருபது செயலகங்கள் இவ் வருட இறுதிக்குள் திறக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அக்கரைப்பற்று தமிழ்ப் பகுதிகளில்

## அறுவடை வேலைகளுக்கு செல்ல தொழிலாளர் அச்சம்

(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்று தமிழ்ப் பகுதியில் சிறுபோக நெல் அறுவடை வேலைகளுக்கு தொழிலாளர் கிடைப்பது கஷ்டமாக உள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பகுதிக்கு புதிதாக வருபவர்கள் பற்றிய விபரங்களை சிறிலங்கா பாதுகாப்புப்படையினரிம் உடன் அறிவிக்க வேண்டும் என ராணுவத்தினால் அறிவுறுத்தப்பட்டதைத் தொடர்ந்தே தொழிலாளர்கள் இவ் இடங்களுக்கு செல்ல அஞ்சுகின்றனர்.

அண்மையில் அக்கரைபற்று தமிழ்ப் பகுதியை சுற்றி வளைத்த விசேட அதிரடிப்படையினர்வேறு இடங்களில்இருந்து அறுவடை செய்வதற்கு வந்த தொழிலாளரை விசாரணைக்கென அழைத்துச் சென்றனர்

இரத்மலானை கொள்ளை

## ஒரு பெண் உட்பட நான்கு பேர் கைது

(கொழும்பு)

இரத்மலானை ரயில்வே வேலைத்தளத்திலிருந்து நாற்பத்தெட்டு இலட்சம் ரூபா கொள்ளைபோன சம்பவம் தொடர்பாக ஒரு பெண் உட்பட நால்வர் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும், பத்து லட்சம் ரூபா மற்றும் ஒரு றைபிள் என்பன மீட்டெடுக்கப்பட்டிருப்பதாகவும் பொலிசார் கூறியுள்ளனர்.

குற்றப் புலனாய்வுப் பொலிசார் மேலும் கூறுகையில்,

கைதானவர்கள் ஜே. வி. பியுடன் தொடர்புடையவர்கள் என்றும், கொல்லப்பட்ட ஜே. வி.பி உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு உதவுவதற்காகவே இக்கொள்ளை நடத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

## சிவில் நிர்வாகம் தங்களுடையதாம்

(கொழும்பு)

''தீவகத்தில் நாம் சிவில் நிர்வாகத்தை மட்டுமே மேற்கொண்டு வருகின்றோம் தீவகத்தின் பாதுகாப்பிற்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல'' இவ்வாறு ஈ. பி. டி. பி. தலைவர் டக்கிளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.


## விற்பனையாளர் பணிக்கு பெண் தேவை

நகரிலுள்ள புத்தக வியாபார நிறுவனத்திற்கு பெண் விற்பனையாளர்கள் தேவை பூரண, சுய விபரத்துடன் விளம்பர இல. 166 மே/பா. ஈழநாதம் என்ற முகவரிக்கு 28-8-1992 க்கு முன் விண்ணப்பிக்கவும். (3070)



1986 ஆம் ஆண்டு இந்தியாவில் பயிற்சி முகாமில் தவறுதலாக நிகழ்ந்த துப்பாக்கிச்சூட்டில் எம்மைப்பிரிந்த-

**பசில்** (வேலுப்பிள்ளை அருட்செல்வம்-பருத்தித்துறை, யாழ்.)

யாழ் கோட்டையிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் ஏவிய எறிகணை நகர்ப்பகுதியிலுள்ள தனியார் வங்கியொன்றின் முன்னால் வீழ்ந்து வெடித்ததில் கொல்லப்பட்ட வங்கி முகாமையாளரான - கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1988 ஆம் ஆண்டு உரும்பராயில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான-

**எம். துரைராசா**

1990 ஆம் ஆண்டு கிளிநொச்சி - இயக்கச்சிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**குட்டி** (கனகசபை கிருபாகரன்-புலோப்பளை மேற்கு, பளை, கிளிநொச்சி)

முல்லைத்தீவில், சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கைலாஸ்** (கனகசபாபதி லோகேந்திரா- 116/3, கச்சேரி ஒழுங்கை, அரியாலை, யாழ்.)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது படுகொலை செய்யப்பட்ட மாணவனாகிய வந்தாறு மூலை பிரதான வீதியைச் சேர்ந்த தமிழ் இளைஞன் - மியாங்குளம் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட 3 - தமிழர்கள்.

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட தாய், தந்தை, குழந்தைகள் ஆகிய அறுவர், மற்றும், வண்ணார்பண்ணை மேற்கு, ஆனைக்கோட்டைப் பகுதிகளில் கொல்லப்பட்ட இருவர் ஆகிய 8 தமிழர்கள் - நாரந்தனை வடக்குப் பகுதியில் சிறிலங்கா முப்படையினரும் இணைந்து மேற்கொண்ட அகோரத் தாக்குதல்களின் போது கொல்லப்பட்ட 30 தமிழர்கள் - மண்டைதீவில், சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட அட்டூழியங்களின் போது படுகொலை செய்யப்பட்ட கணவன், மனைவி, பெண்குழந்தை மற்றும், ஒரு சிறுமி ஆசிரியை ஆகிய 5 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/4933]

யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

பாமர மக்களின் அனுதாபத்தைப் பெற விரும்பினால் மிகக் கொச்சையான மடமையான விசயங்களை அவர்களுக்கு நீ சொல்ல வேண்டும்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 24-08-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


## மீண்டும் ஜே. வி. பி. ?

"ஜே.வி.பி.யினர் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த முயன்றுவருகின்றார்கள் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களிடம் அவர்கள் செல்வாக்குப் பெறமுயன்று வருகிறார்கள்" என சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளதோடு, "தீயசக்திகள் தெரிந்தோ, தெரியாமலோ ஜே.வி.பி.யினருக்கு ஆதரவு வழங்கி வருகின்றன" என்றும் தெரிவித்தார்.

திரு. பிரேமதாசாவின் இவ் அறிவிப்பானது, ஜே.வி.பி.யின் செயற்பாடுகள் தெற்கில் மீண்டும் அதிகரித்தமையினால் எழுந்துள்ளதென்று கூறிவிடமுடியாது. ஏனெனில், ஜே.வி.பி யினரின் செயற்பாடுகள் பெரியளவில் அதிகரித்துள்ளதற்கான பெரியசான்றுகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இரத்மலானை புகையிரத ஊழியர்களின் சம்பளப்பணம் கொள்ளையிடப்பட்டது தொடர்பாக ஜே.வி.பி. யினர் மீது அரசாங்கமும், பொலிஸாரும் குற்றம் சாட்டத்தொடங்கியிருப்பினும், அது எந்தளவிற்கு நம்பிக்கைத்தன்மை கொண்டது என்பது கேள்விக்குரியதே. ஏனெனில், கடந்த காலத்தில் ஜே.வி.பி யின் பேரில் பல கொலைகளையும், சட்டவிரோத நடவடிக்கைகளையும் அரசாங்கத்தின் ஆயுதம் தரித்த சட்டவிரோதக் கும்பல்கள் மேற்கொண்டுள்ளதற்கான சாட்சியங்கள் பல உள்ளன.

ஆகையினால் ஜே.வி.பி. யினர் குறித்து சிறிலங்கா ஜனாதிபதியின் திடீர் எச்சரிக்கையானது, வேறு அரசியல் உள்நோக்கம் கொண்டது என்றே கூறலாம். பிரேமதாசா அரசாங்கம் என்றுமில்லாதவாறு அதிகரித்துவரும் அரசியற் பொருளாதார நெருக்கடிகளில் சிக்கியுள்ளது. அத்தோடு, அரசிற்கெதிரான எதிர்ப்பும் தென்னிலங்கையில் அதிகரித்து வருகின்றது. இந்நிலையில், மக்களை திசை திருப்புவது அரசாங்கத்திற்குமிகவும் அவசியமானதொன்றாகவுள்ளது.

திரு. பிரேமதாசாவிற்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஓர் அணியில் திரளாவிட்டாலும், அரசிற்கெதிரான போராட்டத்தில் முனைப்பாக ஈடுபட்டு வருகின்றன. மக்களும் ஐக்கியதேசியகட்சி ஆட்சியில் வெறுப்புக்கொள்ளத்தொடங்கியுள்ளது போல் தெரிகின்றது. அண்மையில், லெப்.ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவினதும், மேஜர் ஜெனரல் விஜய விமலரெட்ணாவின் இறுதிச் சடங்கின் போதும் கனத்தைமைதானத்தில் அமைச்சர்கள் மீதும், அரச ஆதரவாளர்கள் மீதும் சிங்கள மக்கள் கற்களை

# தேசிய முன்னணி உடைவில் நரசிம்மராவின் கரம்?

தேசியமுன்னணியில் இருந்து 20 லோக்சபா உறுப்பினர்கள் வெளியேறியுள்ளனர். இது கட்சியின் மொத்த லோக்சபா உறுப்பினர் தொகையில் மூன்றிலொன்றிற்கு அதிகமான தொகையாகும். எனவே கட்சி தாவல் தடைச்சட்டத்தின் கீழ் இவர்களது பதவிகள் இரத்தாகபாட்டா.

தேசிய முன்னணியில் ஏற்பட்ட இந்த உடைவு நரசிம்மராவ் தலைமையிலான ஆளும் சிறுபான்மை அரசாங்கத்திற்குப் பெரிதும் சாதகமானதாகும். இவர்கள் காங்கிரஸ் (ஐ) உடன் இணைந்து கொள்வார்களாயின் நரசிம்மராவ் அரசாங்கம் அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியும்.

தேர்தல் முடிந்ததும் புதிய அரசாங்கத்தை அமைப்பதில் அறுதிப் பெரும்பான்மையின்றிப் பெரிதும் திண்டாடிய நரசிம்மராவ் தேசிய முன்னணியில் ஒரு பகுதியினரைப் பிரித்தெடுத்து அரசாங்கத்தை அமைக்க முயல்வதாக அன்று செய்திகள் வெளியாகின ஆனால் உடனடியாக அன்று அது சாத்தியப்படவில்லை.

இந்த 20 பேரின் விலகலும் காங்கிரஸ் (ஐ) யின் வேலையென வி. பி. சிங் தெரிவித்துள்ளார். அது உண்மையாயின் இவர்களைப் பிரித்தெடுப்பதற்கு நரசிம்மராவுக்கு ஒரு வருடம் தேவைப் பட்டுள்ளது எனலாம்.

அவ்வாறுநரசிம்மராவ் இவர்களைப் பிரித்து தன்னுடன் இணைத்துக் கொள்வாராயின் அது நரசிம்மராவ் அரசாங்கத்தின் ஆயுளைப் பலப்படுத்தும் என்றே கூறலாம். இவர்கள் 20 பேரும் பிரிந்ததில் ராவுக்கு அரைவாசி வெற்றி இவர்கள் ராவுடன் இணைந்து கொண்டால் அது அவருக்கு முழு வெற்றி. ஆனால் இந்த 20 பேரின் கட்சி விலகலுக்குப்பின்னால் பதவி அல்லது பணம் என்பன விளையாடி இருக்கலாம் என்பது இவர்களது அரசியல் அந்தஸ்தை குறைக்கக் கூடிய விடயமே,

- மு. தி

# பெனாசிர் ஆட்சி கவிழ்ப்பு பின்னணியில் பாக். புலனாய்வு துறை

## ஒலிப்பதிவு நாடா வெளியிடும் தகவல்

பாகிஸ்தான் பிரதான எதிர்க் கட்சித் தலைவியான பெனாசிர் பூட்டோவின் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக 1989 ஆம் ஆண்டில் பாகிஸ்தானிய உளவுப் படையினரான (ஐ. எஸ். ஐ) மேற்கொண்ட சதித்திட்டங்களை வெளிப்படுத்தும் ஒடியோகசற் ஒன்றுவெளியிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தகவல் தொடர்பு செயலாளரான சலீம் நாசர் இந்த ஒலிப்பதிவு நாடாவை வெளியிட்டார்.

இந்த ஒலிப்பதிவு நாடாவில் பாகிஸ்தானிய உளவுப் பகுதியில் கடமையாற்றும் அதிகாரிகள் சிலருக்கும் தற்போதைய அமைச்சர்கள் சிலருக்கும் இடையேயான உரையாடல் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டில் பெனாசிரின் அரசாங்கத்திற்கு எதிராகக்கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப்பிரேரணையின் போது மக்கள்கட்சி உறுப்பினர்கள் சிலரை விலைக்கு வாங்குவது தொடர்பாகவே இந்த உரையாடல் இருந்துள்ளது.

பாகிஸ்தானிய மக்கள் கட்சியினர் கடந்த வாரம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இந்த ஒலிப்பதிவு நாடா போட்டுக் காண்பிக்கப்பட்டது. இந்த ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்யப்பட்டுள்ள உரையாடல் பாகிஸ்தானில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது மக்கள் கட்சியின் உறுப்பினர்கள் பலரை விலைக்கு வாங்க முடியாமல் போய்விட்டதால் பிரேரணை தோல்வியில் முடிவடைந்தது.

பாகிஸ்தானில் உளவுச் சேவையின் அரசியல் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த பிரிகேடியர் இம்தாஸ் இந்த உரையாடலில் முக்கியமான ஒருவராகக் காணப்படுகின்றார்.

"இஸ்லாமிய ஜம்ஹோஹி இத்தால்" என்ற அமைப்பை பாகிஸ்தான் மக்கள் கட்சி ஆட்சியில் இருந்த காலத்திலேயே உருவாக்கிப் புகழ் பெற்றவரான இவர், இவருடைய சேவையைப் பாராட்டு முகமாக பாகிஸ்தானிய புலனாய்வுப் பிரிவினர் தலைவராக பிரதமர் நவாப் ஷெரீப் இவருக்கு பதவி உயர்வு வழங்கியுள்ளார்.

பெனாசிர் பூட்டோவின்அரசாங்கத்தை பதவியில் இருந்து கவிழ்ப்பதற்கான சதியில் ஜனாதிபதி குலாம் இஷாக்கானும் ஆரம்பத்தில்முக்கியபங்கு வகித்துள்ளார் என நாட்டு மக்களிடையே பொதுவான ஒரு நம்பிக்கை நிலவுகின்றது.

ஆரம்பத்தில் அவர் அரசியலமைப்பின் மூலமாகத் தனக்குத் தரப்பட்டிருந்த அதிகாரங்களைப் பயன்படுத்தாமல் மறைமுகமான வழிகளில் பெனாசிர் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்றேபாகிஸ்தானிய அவதானிகள் பலரும் நம்புகின்றனர்.

எனினும் நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வி அடைந்ததை அடுத்து ஒன்பது மாதங்களின் பின்னர் ஜனாதிபதி என்ற தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி அரசியலமைப்புச் சட்டத்தின் துணையுடன் பெனாசிரை பதவியில் இருந்து தூக்கி எறிந்தார்.

பெனாசிரின் அரசாங்கத்தில் பெருமளவிலான ஊழல்களும் அதிகார துஷ்பிரயோகங்களும் நடைபெற்றிருப்பதாகக் கூறியே அவரது ஆட்சியை குலாம்இஷாக்கான் தூக்கிஎறிந்தார். ஆனால் இவ்வாறான குற்றச் சாட்டுக்கள் எதுவும் மக்கள் முன்பாக நிரூபிக்கப்படவில்லை.

இதனால் பெனாசிர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை சுமத்தி அவர் மீது வழக்குத் தாக்கல் செய்யவேண்டிய தேவை தற்போதைய அரசாங்கத்திற்கும் ஜனாதிபதி குலாம் இஷாக் கானுக்கும் ஏற்பட்டுள்ளது. ஏனென்றால் அவர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாவிடின் பெனாசிரின் அரசைக்கலைத்ததுபிழையாகிவிடும்.

இந்நிலையில் பாகிஸ்தானிய இராணுவ உளவுப் பிரிவினரும், ஆட்சியாளர்களும் பெனாசிரை எப்படியாவதுஅரசியலில் இருந்து வெளியேற்றிவிடவேண்டும் என்று திட்டமிட்டு செயற்படுவதையே காணக்கூடியதாக உள்ளது. இஸ்லாமியசட்டங்களை அவர் மீறியுள்ளார் எனவும் அதற்காக அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளதும் இதன் ஒரு பகுதியே.

# பொதுத் தேர்தலை சந்திக்க நாம் தயாராகின்றோம்

## கருணாநிதி அறிவிப்பு

(சென்னை)

"சரித்திரம் விரைவில் திரும்பும். பொதுத்தேர்தலை சந்திக்க தயாராக இருப்போம்" என்று தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி கூறியிருக்கிறார்.

பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்த கருணாநிதி, சரித்திரம் விரைவகவும் திரும்பலாம். சற்று தாமதமாகவும் திரும்பலாம். ஆனால் திரும்பியே தீரும். அதற்கு நாம் ஆயத்தமாக வேண்டும். என்றும்மக்களைக் கேட்டுக் கொண்டார்.

தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை கொண்டே தி. மு க. செத்துப்போய்விட்டது என்று பிரசாரம் செய்தவர்கள் அதே பிரசாரத்தை ஒன்றரைஆண்டு காலத்திற்கு மேலாக இன்னமும் செய்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

இதில் இருந்தே அவர்கள் திட்டமிட்டுப் பொய் சொல்லி மக்களைத்திசைதிருப்பப்பார்க்கிறார்கள் என்பது உலகுக்கும் எனக்கும் தெளிவாகத்தெரிந்த ஒன்று.

மக்களும் இப்போது பேசத் தொடங்கி விட்டார்கள். என்னையா இது இவர்களே பொழுது விடிந்து பொழுது போனால் தி.மு க வைப் பற்றியே திட்டித் தீர்த்துக் கொண்டு இருக்கிறார்கள் இதிலிருந்தே தி.மு க. ஆளுங்கட்சியாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அது மாபெரும் சக்தி என்பது உள்ளங்கை நெல்லிக் கனி போன்ற உண்மையாகி விட்டது.

போகிற போக்கைப் பார்த்தால் விரைவில் ஒரு பொதுத் தேர்தலையும் சந்திக்க வேண்டியிருக்கும்சரித்திரம்திரும்பும்,

சந்திக்க இருக்கும் பொதுத் தேர்தல், பல வழக்குகள், விசாரணைக் கமிஷன், இத்தனை செலவுக்குமான நிதியை வழங்கவேண்டும்என்றும் கேட்டுக் கொண்டார்.

# பங்களாதேஷிற்கு எதிராக இந்தியா செயற்படாது

## - இந்திய அரசு அறிவிப்பு

(டாக்கா)

பங்களாதேஸுக்குள் எந்த வித ஊடுருவலையும் இந்தியா ஆதரிக்கப் போவதில்லையெனவும், சக்மா அகதிகள் அனைவரும் தாயகம் திரும்பவேண்டுமெனவும் இந்தியா கூறியுள்ளது-

டாக்காவில் தற்போது நடைபெற்றுவரும் பங்களாதேஷ் - இந்திய அரசுகளின் வெளியுறவுச் செயலாளர்கள் மட்ட பேச்சுவார்த்தைகளில் சிட்டகாங் மலைப் பகுதிகளில் பங்களாதேஷிலிருந்து வந்து குடியேறியுள்ள சக்மா பழங்குடி மக்கள் உடன் நாடு திரும்ப வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது-

இப்பேச்சுவார்த்தைகளின் போது பொதுவான நதிகளின் நீர்ப்பகிர்வு குறித்தும், பேசப்பட்டது-

# சோமாலியா பட்டினிச் சாவு; 15லட்சம்பேர்மடியும் அபாயம்

# ஆசிய பசுபிக் பிராந்தியங்களில்

...ரட்ணாவின் இறுதிச் சடங்கின் போதும் கனத்தைமைதானத்தில் அமைச்சர்கள் மீதும், அரச ஆதரவாளர்கள் மீதும் சிங்கள மக்கள் கற்களை வீசியதில் இருந்தே இதைப் புரிந்துகொள்ளலாம். அதாவது அரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்பை இதுவரை இல்லாதது போன்று வெளிப்படையாகக் காட்டத்தொடங்கியுள்ளனர்.

இதேவேளை, மக்கள் சாதனங்களான பத்திரிகைகளும் அரசாங்கத்திற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளன. "குண்டர்கள் படையால் சிறிலங்கா அரசு ஜீவிக்கின்றது. சிறிலங்கா அரசால் குண்டர் படைஜீவிக்கின்றது" என்றுஒருபிரபல சிங்கள பத்திரிகையாளர் பிரேமதாசா அரசாங்கத்தைக் கண்டனம் செய்துள்ளார். இதேவேளை, உள்ளூர் பத்திரிகையாளர்களுடன் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும் சேர்ந்து கொண்டுள்ளமை அரசிற்கு ஓர் அபாய எச்சரிக்கை என்பதில் சந்தேகமில்லை.

அத்தோடு, நாட்டின் பொருளாதாரமும் பெரும் நெருக்கடி நிலையில் உள்ளது. அதிகரித்து வரும் யுத்தச் செலவீனமும், வரட்சி போன்றவற்றால் ஏற்பட்ட உற்பத்தி வீழ்ச்சியும் பொருளாதாரத்தை ஆட்டம் காணச் செய்துள்ளது. இதேவேளை, உதவி வழங்குவதாக உறுதி அளித்திருந்த சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி என்பன சில குறிப்பிட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுமாறு நிர்ப்பந்தங்களைப் போட்டுள்ளன. ஆனால், இந் நிபந்தனைகள் நிறைவேற்றப்படும் பட்சத்தில் அரசு மீதான மக்களின் அதிருப்தியை மேலும் வளர்க்க கூடியவையாக அவை அமைந்து விடும் என அரசு அஞ்சுகிறது. இதனால் நிபந்தனைகளை நிறைவேற்றத் தயங்குகிறது.

இந்நிலையில்தான் அரசாங்கம் மக்களின் கவனத்தைத்திசை திருப்பவும், அரசியல் எதிரிகளை ஒழித்துக் கட்டவும் மீண்டும் ஜே. வி. பி. என்ற அத்தியாயத்தை திறக்குமாப்போல் உள்ளது. இதுவரை சிங்களவரின் கவனத்தை திசை திருப்ப இனவாதத்தையும், தமிழர் மீதான இராணுவ நடவடிக்கையையும் வெளிக்காட்டி வந்த அரசாங்கம் தற்பொழுது இனப்பிரச்சினையை முதன்மைப் படுத்த முடியாது உள்ளது. ஏனெனில், தமிழர் தேசிய இனப் பிரச்சினையை பிரேமதாசா அரசாங்கம் தீர்த்துவைக்காது என்றும், தமிழரை இராணுவ ரீதியாக வெற்றி கொள்ள முடியாது எனவும் சிங்களவர் உணர்ந்து கொள்ளத் தொடங்கியுள்ளனர். ஆகையினால் தான் ஜே.வி.பி. பக்கம் திரு. பிரேமதாசா தன் கவனத்தை திருப்பியுள்ளார் போல்தெரிகிறது. என்னதான் இருந்தாலும் கடந்த காலத்தில் ஜே வி.பி யினர் திரு. பிரேமதாசாவிற்கு ஜனாதிபதி பதவியையும், தனது எதிரிகளை ஒழித்துக் கட்டவும் பேருதவி புரிந்தவர்கள் அல்லவா? மீண்டும் ஒருமுறை அப்பெயர் திரு. பிரேமதாசாவிற்கு கைகொடுக்கமாட்டாதா?

## சோமாலியா பட்டினிச் சாவு; 15லட்சம்பேர்மடியும்அபாயம்

(வாஷிங்டன்)

கிழக்கு ஆபிரிக்க நாடான சோமாலியாவில் நிலவும் சிவில் யுத்தமும், பட்டினிக் கொடுமையும் ஐந்துவயதுக்குக் கீழ்பட்ட சோமாலிய சிறுவர்களில் குறைந்தது நான்கில் ஒரு பகுதியினரைப் பலி கொண்டுள்ளது.

இதுபற்றிய தகவல்களை அமெரிக்க அதிகாரிகளும் உதவி நிறுவனங்களும் தெரிவித்துள்ளன.

சோமாலியாவில் 135 நிறுவனங்கள் கூட்டாக நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளன. சோமாலியாவில் நிவாரணப்பணிகளுக்குப் பொறுப்பாக சிரேஷ்ட அமெரிக்க அதிகாரி அன்ட்று நட்சியொஸ், அமெரிக்க ஜனாதிபதியின் விசேட இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சோமாலியாவில் ஐந்து வயதுக்குக்கீழ்ப்பட்ட சிறுவர்களில் கால்வாசிப்பேர் செத்துமடிந்து விட்டதாக உதவி நிறுவனமொன்றின் அதிகாரி பீட்டர் டேவிட் கூறினார். ஆயினும் சரியாக எவ்வளவு சிறுவர்கள் இறந்துள்ளனர் என்பதை கூற முடியாதிருப்பதாக அன்ட்று நட்சியொஸ் தெரிவித்தார்.

சோமாலியாவில் அராஜகத்தை ஒழிக்க முதலில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், அதற்கு முன்னர் அவசர உதவிகள் எவ்வளவு வழங்கப்பட்டாலும் அவற்றால் பலன் பெறுவது கஷ்டமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பதினைந்து லட்சம் சோமாலியர்சள் உடனடியாக பட்டினிக் கொடுமையால் செத்துமடியும் அபாய மேற்பட்டுள்ளது. உலகநாடுகளில் இன்று சோமாலியா பயங்கரமான ஒரு நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது.

லண்டனில்

## யாழ். மத்திய கல்லூரியின் பழையமாணவர் அணிவெற்றி

இங்கிலாந்தில் இலங்கைக் கல்லூரிகள் பழைய மாணவர்கள் கிரிக்கெட் அணிகள் பன்னிரண்டு கலந்து கொண்ட ஆட்ட மோதலில் யாழ். மத்திய கல்லூரி அணி கொழும்பு றோயல் கல்லூரி அணியைத் தோற்கடித்து வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

சுறே வோஸ்ற்றர் பார்க் விளையாட்டு மைதானத்தில் இந்தக் கிரிக்கெட் ஆட்டம் நடைபெற்றது. ஏறத்தாழ 6,000 இலங்கையர் இந்தஆட்டத்தைக் கண்டு களித்தனர்.

ஆட்டத்தில் நாளந்தா, மகிந்தா, றோயல், சென். யோசப்ஸ், சென். தொமஸ், சென் பீற்றர்ஸ், கண்டி ரிறிரிற்றி, சென். யோண்ஸ், சஹிரா, ஆனந்தா, சென். அன்ரனீஸ் மற்றும். யாழ். மத்திய கல்லூரிப் பழைய மாணவர் அணிகள் கலந்து கொண்டன.

முதலாவது அரை இறுதி ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணி கண்டி ரிறிரிற்றிக்கு எதிராக விளையாடி வெற்றி ஈட்டியது. இறுதி ஆட்டத்தில் மத்திய கல்லூரி அணி கொழும்பு றோயல் கல்லூரி அணியை வென்றது.

சிறந்த ஆட்டக்காரருக்கான கிண்ணத்தை யாழ். மத்திய கல்லூரி அணித்தலைவரான கே. தொமஸ்பெற்றுக் கொண்டார். ஏ.சி ஈ பிளான்ஸ்லிமிட்டெட் சார்பாக அதன் மேலாளர் கே. சிறிஸ்கந்தராசா கிண்ணத்தை வழங்கினார்.

தொடர்ந்து மூன்றாவது தடவையாக யாழ்.மத்திய கல்லூரி அணி வெற்றிக் கேடயத்தைத் தட்டிக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

## ஆசிய பசுபிக் பிராந்தியங்களில் அமைதியின்மை ஏற்படலாம்

– அமெரிக்காவிற்கு சீனா எச்சரிக்கை

அமெரிக்கப் பொருள்களை சீனாவின் சந்தைகளில் விற்பனை செய்யும் நோக்கத்தோடு நடந்த பேச்சுக்கள் தோல்வி அடைந்ததை அடுத்து அமெரிக்காவில் சீனாவின் விற்பனைப் பொருள்களுக்கு அபாதக் கட்டணம் செலுத்த வேண்டும் எனக் கேட்கப்படும் நடவடிக்கைகளுக்கு எதிராக சீனா எச்சரிக்கை செய்துள்ளது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கையால் அமெரிக்க–சீன பொருளாதார உறவுகள்மட்டுமன்றி ஆசியப் பசுபிக் பிராந்தியத்தின் வழமையும், உறுதிப்பாடும் பாதிக்கப்படலாம் என்று சீன வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

## ஏல விற்பனையில் லிங்கனின் உரை

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் சிவில் யுத்த ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனின் பிரசித்தி பெற்ற உரையொன்றின் பிரதி ஒன்று ஏல விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.

சோத்பே ஏலவிற்பனை நிலையம் இதனை விற்பனை செய்யும். ஆபிரகாம் லிங்கனின் மனைவியின் மைத்துனர் இந்தப் பிரதியை விற்பனைக்கு விட்டுள்ளார். 1857-1858 ஆண்டுகள் இது எழுதப்பட்டது. இந்தப் பிரதி 300,000 டொலர் முதல் 500,000 டொலர் வரை விற்பனையாகலாம் எனக் கூறப்படுகிறது.

## மதுவிற்குத் தடை

மதுபானத்தை முற்றாகத் தடைசெய்யும் தீர்மானமொன்றைப் பாகிஸ்தான் பாராளுமன்றம் அங்கீகரித்துள்ளது.

90 சதவிகித முஸ்லிம்களைக் கொண்ட பாகிஸ்தானில் மதுபானம் அருந்தத் தடைவிதிக்கப்பட்டுள்ளது, இஸ்லாமிய சட்டத்தின் கீழ் இது தண்டனைக்குரிய குற்றமாகும். தற்போது முஸ்லிம் அல்லாதவர்களும் இத் தடையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

கூட்டுறவுத் தேர்தல்களில்

## புகார்கள் ஏற்பட்டால் காங்கிரஸ் சகிக்காது

– எஸ். ஆர். பாலசுப்பிரமணியம

(சென்னை)

கூட்டுறவுத் தேர்தல்களில் திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில் ஏற்பட்ட புகார்கள் இப்போதைய ஜெயலலிதா ஆட்சியிலும் வருமேயானால் காங்கிரஸ் கட்சி அதனைச்சட்டப் பேரவையிலும் வெளியேயும் பெரிய பிரச்சினையாகக் கருதும் என்று எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் எச்சரித்தார்.

மேலும் சொந்தக் கட்சிக்காரரையே இம்சிக்கும் போக்கை எதிரணியினர் கைவிட வேண்டும். கட்சிக்கு நல்ல தலைமை கிடைக்க வேண்டும் எனத்தொண்டர்கள் விரும்புகிறார்கள் என்றும் அவர் ஆகஸ்ட் பொன்விழா கூட்டத்தில் பேசும் போது கூறினார்,

## மூக்கினூடாக இன்சுலின்

நீரிழிவு நோயாளர்களின் மூக்கினுள் இன்சுலினைப் பாய்ச்சசகூடிய (நேசல் ஸ்பிறே) புதியமுறை ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது,

இந்தமுறை நீரிழிவு நோயாளர்களுக்கு பெரும் ஆறுதலை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்தில் ஆச்ஸ்போர்ட் ராட்கினிப் இன்போமரி நிலையத்தில் அண்மையில் இது குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஊசியேற்றுவதன் மூலம் கிடைக்கும் பலன் போலல்லாது மூக்கினூடாக இன்சுலின் பாய்ச்சப்பட்டதும் அது உடனடியாக இன்சுலின் மட்டத்தை உயர்த்தி விடுகிறது இன்சுலின் வேகம் இவ்வளவு விரைவாக உயர்தல் ஆகாதென ஆய்வாளர்கள் கூறிய போதிலும் இது ஒரு இலகுவானதும் பயன்தரக் கூடியதுமான முயற்சி எனத்தெரிவித்துள்ளனர்.

ஈழநாதம்

# எங்கு கொலை நடந்தாலும் நானே செய்ததாகக் கூறுகிறார்கள்

## -பிரேமதாசா அங்கலாய்ப்பு

(கொழும்பு)

பயங்கரவாத நிலை மீண்டும் தலை தூக்கியிருப்பதாக ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா 'ஐக்கிய தேசியக் கட்சியின் பண்டாரவளைக் கிளைக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் நாட்டில் ஒரு கொலை நடந்துவிட்டால் எதிர்க்கட்சியினர் அதனை நானே செய்துவிட்டதாக கூறுகிறார்கள். ஆனால் எனக்கோ துப்பாக்கி பிடிக்கக்கூடத் தெரியாது என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன், 'எனது ஆட்சியில் திருட்டுக்கும், திருடர்களுக்கும் இடமில்லை. எவராவது தவறு செய்யும்போது கண்டித்தால் அவர்கள் உடனே எனக்கு எதிராகத் திரும்பி விடுகிறார்கள். இருதலைக் கொள்ளிகளுக்கு எமது கட்சியில் இடமில்லை. அத்தகையவர்கள் எமது கட்சியில் இருந்தால் கதவுகள் திறந்தே இருக்கின்றது எனவே அவர்கள் வெளியேறலாம் என்றும் குறிப்பிட்டார்.

இலங்கை-இந்திய ஒப்பந்தம்

## மாற்றம் செய்யும் உரிமை இரு நாடுகளுக்கும் உண்டு

(கொழும்பு)

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் மாற்றங்களைச் செய்து கொள்ளும் உரிமை இரு நாடுகளுக்கும் உண்டு என இந்தியாவின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் தெரிவித்தார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ''இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை'' என்ற தலைப்பில் உரையாற்றினார்.

இந்த மாநாட்டில் இந்த ஒப்பந்தத்தில் வடக்கு-கிழக்கு இணைப்பு ஒரு சர்வசன வாக்கெடுப்புடன் சம்பந்தப்பட்டுள்ளது தொடர்பாக கேட்கப்பட்ட கேள்வியொன்றிற்குப் பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து இந்திய அமைதிகாக்கும் படை வாபஸ் பெறப்பட்ட பின்னர் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு நட்புறவு ரீதியாக வளர்ச்சியடைந்து செல்கின்றது.

1987 ஆம் ஆண்டு ஒப்பந்தம் இறைமையுள்ள இரு நாடுகளுக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தமே என்றும்,

இந்த ஒப்பந்தம் ஒரு நல்ல முன்னேற்றமே என்றும் கருத்து வெளியிட்டார். இந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்குமிடையே நட்புறவையும் கூட்டுறவையும் வலுப்படுத்துவதற்கான ஒரு உறுதியான கருத்தை தரமுடியும் என்றும் தெரிவித்தார்.

இறைமையுள்ள நாடுகளின் உள்நாட்டுப் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் இலங்கைதான் அதன் மக்களுடைய பிரச்சினைகளை கையாளவேண்டும் எனவும், வெளிநாட்டவர்கள் அல்ல எனவும் அவர் குறிப்பிட்டார்.

## தேவை

இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க முல்லைத் தீவுக் கிளையின் நடமாடும் வைத்திய சேவைக்கு ஓர் பதிவு செய்யப்பட்ட மருத்துவர் (R.M.P.) வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியுடைய விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிபரம் கொண்ட விண்ணப்பங்களை 03 - 09 - 1992-ம் திகதிக்கு முன்கிடைக்கக் கூடியதாக, ''செயலாளர், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க முல்லைத்தீவுக் கிளை,'' என விலாசமிட்டு அனுப்பி வைக்குமாறு / நேரில் கையளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

23-08-1992

(பொ. சேதுபதி)
கௌரவ செயலாளர்,
இலங்கைச் செஞ்சிலுவைச்
சங்க முல்லைத்தீவுக்கிளை,
புதுக்குடியிருப்பு.

(3074)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



## மாவீரர் நினைவு விழா

(வடமராட்சி நிருபர்)

வடமராட்சி கோட்டத்தின் அச்சுவேலி உள்ளடங்கிய கரவெட்டி வட்டத்தில் இதுவரை காலமும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஆடி, ஆவணி மாதங்களில் வீரச்சாவெய்திய மாவீரர்களுக்கான நினைவு விழா 27 - 08 - 92 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு ஞானசாரியார் கல்லூரிக்கு அண்மையில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி வட்டத்தின் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மணிவண்ணன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் உரையாற்றுவார்கள். இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளன. [36]

# இந்தியப்படை வந்திராவிட்டால் வடக்கு கிழக்கு எம்மிடம் இராது

லலித் அதுலத் முதலி

[லண்டன்]

இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்திராவிட்டால் இன்று வடக்கு கிழக்கு எம்மிடம் இராது. இவ்வாறு சிறிலங்காவின் முன்னாள் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

லண்டனில் அவர் பி. பி. சிக்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் இந்திய இராணுவத்தின் வருகையால் ஐக்கிய தேசிய கட்சியின் செல்வாக்கு குறையவில்லை இதனை 1988, 1989 தேர்தல் வெற்றிகள் காட்டியுள்ளன.

1977 ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சி ஒருவகையான அதிர்ஷ்டத்தால்தான் வெற்றியீட்டியது. ஆதலால் தான் 1972 ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தை தனக்கு சார்பாக திருத்தியது.

ஜே. ஆர். ஆட்சிக்கும் பிரேமா ஆட்சிக்கும் இடையே பாரிய வேற்றுமைகள் உண்டு. ஜே. ஆர். மந்திரிசபை முடிவுடனே செயற்பட்டார் ஆனால் பிரேமதாசா மந்திரிசபையின் அனுமதி இன்றி விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கினார்.

ஜே. ஆர் ஆட்சியில் படுகொலைகள் இல்லை. பிரேமதாசா அரசு குண்டர்களினாலேயே சீவியம் நடத்துகிறது

அவசரகாலச் சட்டம் தொடர்ந்து தென் பகுதிக்கு தேவை இல்லை. வடக்கு கிழக்கிற்கு தேவைதான் அதை அரசு தென்னிலங்கையில் துஷ்பிரயோகம் செய்கிறது என்று கூறினார்

லண்டனில் மரணமான

## மாணவன் குறித்து விசாரணைநடத்தகோரிக்கை

கடந்த மே மாதம் லண்டனில் திடீரெனக் காலமான யாழ்ப்பாணம் திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த மாணவரான யசோதரலிங்கம் பாலகுமார் 33 வயது என்பவரின் மரணம் தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படவேண்டும் என்று அவருடைய குடும்பத்தினர் அங்குள்ள அதிகாரிகளைக் கேட்டுள்ளனர்.

கிளெனேஹோல், ஸ்ராட்டிறோக் குறோவைச் சேர்ந்த பாலகுமார் லண்டனிலுள்ள கிங்ஜோர்ஜ் மருத்துவமனையில் மே மாதம் 8 ஆம் திகதி மரணமானார்.

## கோமாரி அகதிமுகாமில் நெருப்புக் காய்ச்சல்

அம்பாறை கோமாரி அகதி முகாமில் தங்கியுள்ளோரில் பெருமளவு மக்கள் நெருப்புக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

சுகாதார வசதியின்மை, வரட்சி என்பனவே இந்நிலைக்குப் பெரிதும் காரணமெனத் தெரியவருகிறது

## ஜே. வி. பி. நடவடிக்கைகள் ஆரம்பிக்கும் அறிகுறியாம்

(கொழும்பு)

ஜனதா விமுக்திப் பெரமுனைப் (ஜே.வி.பி) போராளிகள் மீண்டும் தமது போரை ஆரம்பிக்கும் அறிகுறிகள் தென்படுவதாக ஜனாதிபதி ஆர் பிரேமதாசா கூறியுள்ளார்.

ஜே வி. பி போராளிகள் அரசியல் கட்சிகளில் ஊடுருவி ஜனநாயகத்தை அழிக்க முயற்சிக்கலாமென்றும் இதற்காகச் சில அரசியல் கட்சிகளே இத்தகைய தீவிரவாத சக்திகளுக்கு ஆதரவும், பாதுகாப்பும் வழங்கி வருகின்றன என்றும் ஜனாதிபதி குற்றம் கூறினார்.

பண்டாரவளையில் யு என். பி கட்சி தொழிலாளர் கூட்டமொன்றில் பேசும் போது ஜனாதிபதி ஆர் பிரேமதாசா மேற்கண்டவாறு கூறினார்.

ஜே வி. பி. தீவிரவாதிகள் மீண்டும் சுவரொட்டிகள் சுலோகங்கள் எழுதுவது போன்ற வழிமுறைகள் மூலம் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்த முயற்சிப்பதாக அவர் குற்றம் சாட்டினார்.

## 22 ஆயிரம்

...யர்களின் வேதனமும், ஓய்வூதியக்காரர்களின் படியுமே பணப்புழக்கமாக இருக்கிறது அகதிகளுக்கு வழங்கப்படும் உலர்உணவுகளிலேதான் அனேகர் வாழ்க்கையை ஓட்டுகின்றனர்

அம்பாறை மாவட்டத்தில் 20 ஆயிரம் பேர் அகதிகளாக இருக்கிறார்கள். 2168 குடும்பங்களுக்கு மலசலகூட வசதிகள் குடிநீருக்கான கிணறுகள் கூட இல்லை. குழந்தைகளுக்குப் பால்மா, திரிபோசா, உடைகள், பாடசாலை செல்பவர்களுக்குத் தேவையான உபகரணங்கள் கூட இல்லை பாடசாலை செல்லவேண்டிய பெருந்தொகையான பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லாது வீடுகளிலேயே முடங்கியுள்ளனர். 1502 வீடு...

## சொந்தஇடங்களுக்குதிரும்ப அகதிகளுக்கு தடை

இந்தியாவிலிருந்து திருக்கோணமலைக்குத் திருப்பி அனுப்பப்பட்டஅகதிகள் அவர்களது சொந்த இடங்களில் சென்று குடியமர சிறிலங்கா அரச அதிகாரிகள் கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

சிறிலங்கா இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் உள்ளவர்கள் மட்டும் தத்தமது சொந்த இடங்களுக்குச் செல்லலாம் என அனுமதி அளிக்கப்பட்டுள்ளது

ஆனால் இவர்களின் வீடுகளில் சிங்களவர்கள் குடியேறி உள்ளமையால் உப்புவெளி முகாமில் தங்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

## மலாக்கா நீரிணையில் உல்லாசக் கப்பல் மூழ்கியது

மலாக்கா நீரிணையில் ''றோயல் பசுபிக்'' என்ற கிரேக்கக் கப்பல் மூழ்கிய சம்பவத்தில் குறைந்தபட்சம் 5 பேர் உயிரிழந்துள்ளனரெனவும், குறைந்தது 60 பேரைக் காணவில்லையெனவும் அறியவருகிறது

தாய்வானின் மீன்பிடிப் படகு ஒன்றுடன் மோதியதாலேயே கப்பல் மூழ்கியது எனத் தெரிவிக்கப்படுகிறது

விபத்து நடைபெற்ற சமயம் 534 பயணிகள் கப்பலில் இருந்தார்கள். 477 பேர் மீட்கப்பட்டனர் மீட்கப்பட்டோரில் இருவர்பின்னர் இறந்துள்ளனர்

பெரும்பாலான பயணிகள் சிங்கப்பூரைச் சேர்ந்தவர்களாவர். மலேசிய, பிரிட்டிஷ், இந்திய, அவுஸ்திரேலியாப் பயணிகளும் கப்பலில் இருந்தனர்.

1965 இல் கட்டப்பட்ட இந்தக் கப்பல் 1980 வரை அவுஸ்திரேலியாவில் பயணிகளையும், கார்களையும் ஏற்றிச் செல்ல உபயோகிக்கப்பட்டுவந்தது. பின்னர் இது ஆடம்பரக் கப்பலாய் மாற்றியமைக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்த சமயமே மூழ்கியது.

## சம்பவம்

...சென்றிருந்தார்.

லெப்டினன்ட் ஜெனரல் கொட்டேகொடவும் மற்றவர்களும் அராலித்துறைக்குப் போகும் முன்னர் அவர்களைச் சந்திக்க இராணுவ உத்தி...

## 45-ம் நாள் நினைவஞ்சலி

வையமதில் மலர்ந்தது
05



வண்ணான் குளத்தில் மாவீரனானது
11



அமரர்

## மார்க்கண்டு அன்னமணி

மலர்வு:- 1941-04-01

உதிர்வு:- 1992-07-24

அன்பின் சிகரமே, பண்பின் இருப்பிடமே
இல்லத்தின் ஒளிவிளக்கே, உற்றார்க்கு உறைவிடமே
காலன் அவன் கவர்ந்து மாதமொன்று கழிந்தம்மா
கனவுபோல் நீர் மறைந்தீரோ — உங்கள்
நினைவோ இன்றும் எம்மை வாட்டுதம்மா
எப்போதும் தங்கள் ஆன்மா சாந்தியடைந்து
பேரின்ப பெருவாழ்வுபெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் நினைவில் வாடும்

இல. 226, ஆனந்தநகர்,
கிளிநொச்சி.

திரு.நா.மார்க்கண்டு
குடும்பத்தினர்.

(சி- 4935)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

சென்றிருந்தார்.

லெப்டினன்ட் ஜெனரல் கொப்பேகடுவவும் மற்றவர்களும் அராலித்துறைக்குப் போகும் முன்னர் அவர்களைச் சந்தித்த இராணுவ உத்தியோகத்தர்களும் மேஜர் ஜெனரல் விமலரத்னவின் சாரதியான கோப்ரல் எம்.ஏ. உபாலி வேறு இரண்டு வாகனங்களிலும் பயணம் செய்தவர்கள் மற்றும் கொப்பேகடுவவிற்கு சிகிச்சையளித்த டாக்டர் ஆகியோரும் தனிநபர் கமிட்டியினால் விசாரணை செய்யப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது

### இராணுவ

தனால் அப்பகுதியில் இருந்த மேற்படி சங்கத்தின் ஐந்து கிளைகளிலும் இருந்த உணவுப் பொருள்களே மீட்கமுடியாத நிலையில் சிக்கியுள்ளன. இதே வேளை இப்பொருள்களை மீட்பதற்கான நடவடிக்கையில் மேற்படி சங்கம் ஈடுபட்டு வருவதாகவும் தெரியவருகிறது

தற்போது பாதுகாப்பு கருதி பண்டத்தரிப்பு, சில்லாலை, பராயன்பற்று பகுதிகளில் உள்ள கிளைகளில் இருந்து உணவுப் பொருள்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டு வருகிறது. இவை விரைவில் பொதுமக்களுக்கு வழங்கப்படுமென அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. [ச]

### பெருமதியான

இராணுவத்தினர் பொதுமக்களின் வீடுகளுக்குள் புகுந்து அங்கிருந்த புடவைகள், நகைகள், மோட்டார் சைக்கிள்கள், தொலைக்காட்சிப் பெட்டி, டெக் போன்ற விலை உயர்ந்த பொருள்களைக் கொள்ளையடித்தும், ஆடு, கோழி போன்ற கால்நடைகளையும் பிடித்துச் சென்றனர். இவர்கள் இவற்றை இராணுவ வாகனங்களில் ஏற்றிச் சென்றதைக் காணமுடிந்தது என்றார்.

இதேவேளைவயோதிபரான கந்தையா என்பவரைத்தடுத்து வைத்திருந்த இராணுவத்தினர் அவர் அணிந்திருந்த அரை பவுண் மோதிரத்தினைப் பறித்தபின் விடுதலை செய்துள்ளனர். (ச)

பாடசாலை செல்லவேண்டிய பெருந்தொகையான பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லாது வீடுகளிலேயே முடங்கியுள்ளனர். 1502 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்திருக்கிறது 905 வீடுகள் சிறிதளவு சேதமடைந்துள்ளன இம் மாவட்டத்தில் உள்ள 25 அகதிமுகாம்களிலும் 5886 குடும்பங்களைக் கொண்ட 21481 பேர் இருக்கிறார்கள்

இந்த மாவட்டத்தில் நிவாரண வேலைகள் உண்மையானவர்களை இனம் கண்டு கொள்வதற்காகப் பின்போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது பொதுவாக இந்த மாவட்டத் தொழிலாளர்கள் தொழில் இல்லாது பெரிதும் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர் அதிகமானவர்கள் கூலித் தொழிலாளர்கள் அவர்கள் தூர இடங்கள் சென்றே தொழில் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது அங்கு போதுமான பாதுகாப்பு கிடையாது இதனால் அனேகர் வீடுகளிலும், முகாம்களிலும் முடங்கியுள்ளனர் இவர்களில் பலர் மனநோய் பிடித்தவர்களாக காணப்படுகின்றனர்

### இசைமாலை

ச்சி 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதே நேரம் அதே இடத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது

### பயணம்

விஜயம் செய்த இஸ்மாயில் குழுவினர் சம்பவத்தை நேரில் கண்ட எட்டு இராணுவத்தினரின் வாக்குமூலங்களையும் பதிவு செய்துள்ளனர்.

### இந்தியாவிலிருந்து

படுகிறது.

சங்கானையைச் சேர்ந்த வைரமுத்து லிங்கம்(வயது 26) கிளிநொச்சி வாசிகளான ராமையா முருகானந்தராஜா (வயது 31), சிங்ககண்ணு ராமகிருஷ்ணதேவர் (வயது 26), செல்லத்துரை சிவஞானசுந்தரம் (வயது 28), வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சுப்பையா செல்வராஜா (வயது 31) ஆகியோரே காணாமல் போனவர்களாவர்.

தத்தமது சொந்த இடங்களுக்குச் செல்லலாம் என அனுமதி அளிக்கப்பட்டுள்ளது

ஆனால் இவர்களின் வீடு

## அனுமதி

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பிரசார ஏடான ராஜாளிய பத்திரிகைக்கு எதிராக விசாரணைகள் நடத்துவதற்கு கொழும்பு கோட்டை நீதிமன்றம் இரகசியப் பொலிசாருக்கு அனுமதியளிக்குது.

ராஜாளிய பத்திரிகையின் ஆகஸ்ட் 15 ஆம் திகதி இதழில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரை ஒன்று தொடர்பாகவே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது

### முல்லை

ஆனால் இவர்களுக்கு வேறு தொழில்களை மேற்கொள்ள சந்தர்ப்பமில்லை நிவாரண உதவிகளும் ஒழுங்காக வழங்கப்படுவதில்லை

### முல்லையில்

வீச்சு தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த வியாழனன்று இவ் எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டது. இதனால் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை.

### கிழக்கிற்கு

கிழக்கில் இக்குழுக்களின் உறுப்பினர்கள் சிவில் நிர்வாகத்தை நடாத்தப் படையினருக்கு உதவியாகப் பயன்படுத்தப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது

வடபகுதியில் இருந்து இவர்கள் வெளியேற்றப்படவேண்டும் என சிங்களப்படை உயர் அதிகாரிகள் பலர் தெரிவித்த யோசனைகளை தொடர்ந்தே இம்முடிவு எடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது

### மட்டு

போன்ற இடங்களிலுள்ள அகதிமுகாம்களில் வன்செயல் சம்பவங்களின் போது கணவனை இழந்த பெருமளவு விதவைப் பெண்கள் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது

வையமதில் மலர்ந்தது
05 — 11 — 1972



வண்ணான் குளத்தில் மாவீரனானது
11 — 07 — 1992

## 2-ம் லெப். சுவேந்திரன் (பாபு)

(கிருஷ்ணமூர்த்தி கலாதரன்)
(புளியங்கூடல் ஊர்காவற்றுறை)

தேச மண்ணின் விடிவிற்காய்
தேன் தமிழின் வாழ்விற்காய்
ஓலமிடும் அழுகுரல்கள் ஓய்விற்காய்
ஓர்மமுடன் தானும் வேங்கையானவன்

தமிழ் மானம் காக்க என
தன் மான கனல் எரிய
பாரறிய பல் களப் போரிட்டு
மரணித்த மா வீரன் இவன்

23, கருவேலடி லேன்,
கொக்குவில்.

மாவீரர் பெனின்
குடும்பத்தினர்.

[3075]

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 23-08-1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 5347

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்

40-7541, 27-9305, 27-5535, 24-4323, 24-4265, 28-3233, 28-6853, 21-7993, 24-7623, 36-0859, 25-8124, 25-1025, 25-3767, 37-4077, 37-6615, 25-9903

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

28 4545, 28-0732, 27-6439, 26-5576, 43-0517, 27-5217, 41-1799, 40-3073, 41-4176, 24-5454, 26-9992, 26-1343, 24-1209, 26-6628, 28-1730, 26-4990, 27-9088, 22-1647, 27-1072